தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# ஆண்டு ஐந்து
# தமிழ் அறிவுப்போட்டி 2020

## Year 5

## Tamil Language Skills Competition 2020

# தமிழ் அறிவுப் போட்டி 2020

## ஆண்டு 5

ஆரம்பப்போட்டி - 30 கேள்விகள்

இதில் மூன்று சுற்றுக்கள் உள்ளன

ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் தரப்பட வேண்டிய வினாக்களுக்கு அனைத்து விடைகளும் வழங்கினால் மட்டுமே சரியான விடையாகக் கருதப்படும்.

ஒவ்வொரு சரியான விடைக்கும் 10 புள்ளிகள்

எல்லா விடைகளையும் தரத்தவறினால் பிழையான விடை எனக் கருதப்பட்டு 5 புள்ளிகள் கழிக்கப்படும்.

# முதற் சுற்று 10 கேள்விகள்

ஆசிரியரால் வாசிக்கப்படும்

1.

நீதி என்ற சொல்லுக்குரிய எதிர்க் கருத்துள்ள சொல் என்ன?

1. விடை: அநீதி

2.

முத்தமிழ் எனப்படுபவை எவை?

2. விடை: இயல்

இசை

நாடகம்

3.

நெருப்பு என்ற சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல் தருக

3. விடை: தீ , அக்கினி

4.

ஒற்றுமை என்ற சொல்லுக்குரிய எதிர்க் கருத்துள்ள சொல் என்ன?

4. விடை:

வேற்றுமை

5.

இராமாயணத்தை முதலில் தமிழில் பாடியவர் யார்?

5. விடை:

கம்பர்

6.

திருக்குறள் நூலில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?

6. விடை:

133

7.

இந்த வசனம் எந்தக் காலத்தைக் குறிக்கின்றது?

நீ எங்கு போனாய்?

விடை:

இறந்த காலம்

8.

இடைவெளியை நிரப்புக:

உணவை உண்டு மகிழ்ந்தார்கள்

அதுபோல

நடனத்தைக் ______________ ______________

8. விடை:

நடனத்தைக் கண்டு களித்தார்கள்

9.

புகழ் பெற்ற தமிழ் மன்னன் ஒருவர்

1. அரிச்சந்திரன்
2. இராஜ இராஜ சோழன்
3. விக்கிரமாதித்தன்
4. கிருஸ்ண தேவராயர்

9. விடை:

   2. இராஜ இராஜ சோழன்

10.

அவுஸ்திரேலியாவின் அரச சின்னத்தில் காணப்படும் உயிரினங்கள் எவை?

10. விடை:

கங்காரு

இமியு

முதற் சுற்று முடிவடைந்தது

இரண்டாம் சுற்று - 10 கேள்விகள்

11.

தமிழரின் கலைகள் இரண்டு தருக.

11. விடை:

இசைக்கலை, நடனக்கலை

நாடகக்கலை, வாத்தியக்கலை, கட்டடக்கலை,
சிற்பக்கலை, ஓவியக்கலை

12.

தந்தைக்கு எதிர்ப்பாற் சொல் தாய் போல கணவன் என்ற சொல்லுக்கு எதிர்ப்பால் சொல் என்ன?

12. விடை:

மனைவி

13.

இசை வழங்கும் தோற்கருவி இரண்டு கூறுக?

13. விடை:

மேளம், மிருதங்கம், கஞ்சிரா

14.

திருவள்ளுவரின் 133 அடி உயரச் சிலை எங்கே அமைந்துள்ளது?

14. விடை: கன்னியாகுமரி

15.

கவிச்சக்கரவர்த்தி என்று போற்றப்பட்ட கவியரசர் யார்?

15. விடை:

கம்பர்

16.

இராம இலக்குவர் கங்கையைக் கடந்து செல்லப் படகு ஓட்டியவர் யார்?

16. விடை:

குகன்

17.

கோழியின் இளையது கோழிக்குஞ்சு.

பசுவின் இளையது என்ன?

17. விடை:

கன்று

18.

பரதநாட்டியம் யாருடைய கலைவடிவம்?

18. விடை:

தமிழர்களின் கலை

19.

குயில் கூவும்.

மயில் ____________?

19. விடை:

மயில் அகவும்

20.

கம்பர் எழுதிய காவியம் எது?

20. விடை:

கம்பராமாயணம்

இரண்டாம் சுற்று முடிவடைந்தது

மூன்றாம் சுற்று - 10 கேள்விகள்

21.

கண்ணகியின் கதையைக் கூறும் நூல் எது?

21. விடை:

சிலப்பதிகாரம்

22.

ஔவையார் எழுதிய நூல்கள் இரண்டு தருக.

22. விடை:

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை

23.

ஒத்த சொல் தருக:

வடிவு

32. விடை:

அழகு

24.

ஒத்த சொல் தருக:

வரலாறு

24. விடை:

சரித்திரம்

25.

சிலை வடிப்பவர் சிற்பி

கப்பல் ஓட்டுபவர் ________________

25. விடை:

மாலுமி

26.

எதிர்ச் சொல் தருக:

மரியாதை

26. விடை:

அவமரியாதை

27.

எதிர்ச் சொல் தருக

கோழை

Year 5 - 2020

27.

வீரன்

28.

கப்பல்கள் நிற்குமிடம் எது?

28. விடை:

துறைமுகம்

29.

வானவில்லில் உள்ள நிறங்களில் மூன்றைக் கூறுக.

29. விடை:

ஊதா, கருநீலம், நீலம்,
பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு

30.

இன்று புதன்கிழமை நேற்று என்ன கிழமை?

30. விடை:

செவ்வாய்

மூன்றாம் சுற்று நிறைவுபெற்றது

# அரை இறுதிப் போட்டி

## 15 கேள்விகள்

1.

வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க

அரசன், அமைச்சர், மன்னன், வேந்தன்

1. விடை:

அமைச்சர்

2.

பின்வருவனவற்றுள் ஒன்று வேறுபடுகின்றது. அது எது?

1. தோசை
2. புட்டு
3. மணிக்கூடு
4. அப்பம்

2. விடை:

மணிக்கூடு

3.

வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க

மதி, சந்திரன், நிலவு, நட்சத்திரம்

3. விடை

நட்சத்திரம்

4. திருக்குறளை முடிக்கவும்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

____________ ____________ ____________

4. விடை:

பகவன் முதற்றே உலகு

5.

நன்மை என்பதன் ஒத்த சொல்?

தீமை, மேன்மை, நல்லவை, கெட்டவை

5. விடை:

நல்லவை

6.

இந்த மாதம் ஆவணி.

அடுத்த மாதத்தின் பெயர் என்ன?

Year 5 - 2020

6. விடை:

புரட்டாசி

7.

இரும்பு + ஆயுதம் என்பதைச் சேர்த்து எழுதினால்

1. இருப்பாயுதம்
2. இரும்பாயுதம்
3. இருமையாயுதம்
4. இரு ஆயுதம்

7. விடை

2. இரும்பாயுதம்

8.

பன்னிரண்டு மாதங்களைக் கொண்டது எது?

8. விடை:

வருடம், ஆண்டு

9.

கண்ணகியின் எந்த ஆபரணத்தை விற்கச் சென்றபோது கோவலன் கொல்லப்பட்டான்?

9. **விடை**

சிலம்பு

10.

வேறுபட்ட சொல்லை தெரிவு செய்க.

மலர், பூ, புஷ்பம், காய்

10. விடை:

காய்

11.

பழைய காலத்து மன்னர்கள் பாவித்த மூன்று ஆயுதங்கள் கூறுக.

**11. விடை**

அம்பும் வில்லும், வாள், வேல்,
கதை (கதாயுதம்)

12.

பழங்கால விளையாட்டுக்களில்
ஒன்று கூறுக.

12. விடை:

கிளித்தட்டு

போர்த் தேங்காய் அடி

சடுகுடு

வண்டிச் சவாரி

13.

இடைவெளியை நிரப்புக

நோயற்ற வாழ்வே ____________ ____________

13. விடை:

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

14.

வசனமாக ஒழுங்குபடுத்திக் கூறுக:

| | | |
|---|---|---|
| எப்போதும் | குறித்து | நன்று |
| சுவையான | தகவல்களை | வைத்தல் |

14. விடை:

சுவையான தகவல்களை எப்போதும் குறித்து வைத்தல் நன்று.

15. பிரித்துக் கூறுக:

செந்தாமரை

15. விடை:

செம்மை + தாமரை

அரை இறுதிப் போட்டி நிறைவுற்றது.

# இறுதிப் போட்டி 15 கேள்விகள்

1.

உக்கிரம் என்பதன் ஒத்த சொல்

பாவம், சாபம், சலனம், கோபம்

1. விடை:

கோபம்

2.

யாருக்கு நன்றி தெரிவிப்பதற்காக தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது?

Year 5 - 2020

2. விடை:

சூரியனுக்கு

3.

திருக்குறளை வேறு எவ்வாறு அழைப்பர்?

3. விடை:

முப்பாநூல்

தமிழ்மறை

4.

இடை வெளி நிரப்புக

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் ______________ சொல்ல வேண்டாம்

4. விடை:

பொல்லாங்கு

5.

இராமனின் தம்பியர் இருவர் பெயர் தருக.

5. விடை:

பரதன்

இலக்குவன்

சத்துருக்கன்

6.

தென்னையின் இளையது தென்னங்கன்று

வாழையின் இளையது ____________________

6. விடை:

வாழைக் குட்டி

7.

திருக்குறளை பூர்த்தி செய்யவும்

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்
தீயொழுக்கம் என்றும் ________ ________

7. விடை:

இடும்பை தரும்

8.

வசனமாக ஒழுங்குபடுத்திக் கூறுக:

நீர்வாழ் சிட்னியில் ஒன்றுண்டு காட்சிச்சாலை உயிரினக்

8. விடை:

சிட்னியில் நீர்வாழ் உயிரினக் காட்சிச்சாலை ஒன்றுண்டு

9.

பல் கலாச்சார நாடு என்பதன் பொருள்

1. பல வயதுடைய மக்கள் வாழும் நாடு
2. பல இன மக்கள் வாழும் நாடு
3. பல உயிரினங்கள் வாழும் நாடு
4. இயற்கையான உயிரினங்களைக் கொண்டநாடு

9. விடை:

2. பல இன மக்கள் வாழும் நாடு

அடுத்த கேள்விகளுக்கு பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து கூறுக.

10.

குமரன் தன் நண்பன் ______________ சென்றான்.

ஆனால் நண்பன் ___________ இல்லை.

(வீட்டில், வீட்டுக்கு, வீட்டின்)

10. விடை:

குமரன் தன் நண்பன் வீட்டுக்கு சென்றான்.

ஆனால் நண்பன் வீட்டில் இல்லை.

11.

வாணி பாட்டுப் __________ தேர்ந்தெடுக்கப்பட்டாள்

அவள் அந்தப் __________ வெற்றி பெற்றாள்.

(போட்டிக்கு, போட்டியை, போட்டியில்)

11. விடை:

வாணி பாட்டுப் போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டாள் அவள் அந்தப் போட்டியில் வெற்றி பெற்றாள்.

12.

அது ____________ தமிழ்ப் புத்தகம்.

நீ அதை ____________ கொடுத்துவிடு.

(என்னிடம், என்னுடைய, என்னால்)

12. விடை:

அது என்னுடைய தமிழ்ப் புத்தகம்.

நீ அதை என்னிடம் கொடுத்துவிடு.

13.

இளங்கோவின் __________ கறை பட்டுவிட்டது. அதனால், அவன் அந்தச் __________ அணியவில்லை.

(சட்டையில், சட்டையை, சட்டைக்கு)

13. விடை:

இளங்கோவின் சட்டையில் கறை பட்டுவிட்டது.

அதனால், அவன் அந்தச் சட்டையை அணியவில்லை.

14.

தமிழ் எழுத்துக்களில் உள்ள மெய் எழுத்துக்கள் எத்தனை?

14. விடை:

,

# 18

(பதினெட்டு)

15.

பெயர்களைக் குறிக்கும் சொற்கள், பெயர்ச்சொற்கள் எனப்படும்.

செயலைக் குறிக்கும் சொற்களை எப்படிக் கூறலாம்?

15. விடை:

செயலைக் குறிக்கும் சொற்கள்

வினைச் சொற்கள்

போட்டி முடிவடைந்துள்ளது.

நன்றி.

மேலதிக கேள்வி தேவைப்பட்டால்...

1.

தங்கப்பதக்கம் என்ற சொல்லை பிரித்து கூறுக

1. விடை:

தங்கம் + பதக்கம்

2.

அவுஸ்திரேலியாவில் பூக்கள் அதிகமாகக் காணப்படும் பருவகாலம் எது?

விடை:

வசந்தகாலம், இளவேனிற்காலம்

3.

7 நாட்கள் கொண்ட காலத்தொகுதியை எப்படி அழைக்கலாம்?

Year 5 - 2020

3. விடை:

வாரம், கிழமை